இப்பட்டப் பாடநெறியின் பாடவிதானமானது சமூகவிஞ்ஞான பாடங்களை உள்ளடக்கத்துடன் சமூகப்பணி விசேட நுட்பமுறைகள் உள்ளடகியுள்ளதுடன் அது தொடர்பான பரந்த அறிவினை மாணவர்களுக்கு பெற்றுக்கொடுக்கிறது. அவ்வாறே களப்பயிற்சியூடாக விடய அறிவும் பிரயோக அனுபவமும் பெற்றுக்கொடுப்பதற்கு வாய்ப்பினை வழங்குகிறது.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் சமூகப்பணிக் கல்லூரியில் பட்டம்பெற்ற பட்டதாரிகள் பின்வரும் விதத்திலான தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொண்டுள்ளமையை குறிப்பிடமுடியும்.

பட்டதாரிகள் ஈடுபடும் தொழிற்துறைகள்

அரசாங்கத்துறை
- சமூகப் பணி உளவளத்துணை, மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்.
- துறைமுக அதிகாரிகள்
- அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
- நன்நடத்தை உத்தியோகத்தர்கள்
- சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்
- உளவளத்துணையாளர்
- இலங்கை ஆசிரியர் சேவை
- உள சமூகப் பணி உளவளத்துணையாளர்

அரச சார்பற்ற நிறுவனங்கள் - அரச சார்பற்ற நிறுவனங்களில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பெருமளவு வரவேற்பு எமது பட்டதாரிகளுக்கு உள்ளது.

அதற்கேற்ப பின்வரும் தொழில் வாய்ப்பக்கள் எமது பட்டதாரிகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.
- செயற்திட்ட முகமையாளர்/உத்தியோகத்தர்
- நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்
- உளவளத்துணையாளர்

தனியார் துறை
- சமூக பொறுப்புக்கள் இணைப்பாளர்
- ஆலோசனையாளர்கள்
- மனித வள முகாமைத்துவ உத்தியோகத்தர்.

இது தவிர வெளிநாட்டு புலமைபரிசில் பெற்று மாணவர்கள் NORAD, AUS/AID, Commonwealth, Indian Government scholarship போன்ற நிறுவனங்களில் உயர் கல்வியினை தொடர்வதற்காக வெளிநாடு சென்றுள்ளனர். இம்மாணவர்களுக்கு பெரும் வரவேற்புள்ளதுடன் உயர் மட்ட தொழில்வாய்ப்புக்களும் கிடைக்கப்பெறுகின்றன.

கல்விசாரா செயற்பாடுகள்

அந்நிகழச்சிகளில் பங்குபற்றிய வளவாரளர்கள் பின்வருமாறு .

1. சமூகப்பணித் தினம் 2021ம் ஆண்டு மாரச் மாதம் 09ம் திகதி










நான் இருப்பதனால் நாம்: சமூக ஒற்றுமையையும் உலகலாவிய தொடர்புகளையும் வலுப்படுத்தல்

உலக சமூகப்பணித்தினம் மார்ச் மாதம் 09ம் திகதியாகும். இம்முறை சமூகப்பணி தினத்தின் தொனிப்பொருள் நாம் இருப்பதனால் நான்: சமூக ஒற்றுமையையும் உலகலாவிய தொடர்புகளையும் வலுப்படுத்தல் என்பதாகும். ஆபிரிக்க முன்மாதிரி வாசகமான உபுண்டு (UBUNTU) அடிப்படையாகக்கொண்ட தொனிப்பொருளாகும். அது ஆபிரிக்க வலய நாடுகளில் மாத்திரமன்றி ஏனைய நாடுகளிலும் அது ஏன் முக்கியம் பெறுகின்றது? நான் இருப்பதானல் நாம் எவ்வாறு என்பதன் முக்கியத்துவம் என்ன? கொவிட் தொற்று காலத்தில் அதனை முகாமைப்படுத்த அது எவ்வளவு முக்கியம் பெறுகின்றது என்பதனை நாம் சிந்திக்க வேண்டும். பெருந்தொற்று காரணமாக நாம் பெற்றுக்கொண்ட புதிய அனுபவங்களை மீட்டுப்பார்ப்பதன் மூலம் எதிர்காலத்தில் முகங்கொடுக்கவேண்டிய சவால்களுக்கு தயாராகுதல் முக்கியமானதாகும்.

அதற்காக 2021ம் ஆண்டு 09ம் நாள் தேசிய சமூக அபிவிருத்தி நிறவனமும் மொரட்டுவை SERVE நிறுவனமும் ஒன்றுசேர்ந்து ஒன்றிணைந்த செயற்பாடுகள் மூலம் மொரட்டுவை பகுதியிலுள்ள சமுதாயத்தவர்களின் பங்கேற்புடன் நடாத்தப்பட்டது. அதற்கு தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் சாமினி அத்தனாயக்க உள்ளிட்ட பணிப்பாளர்களும் கல்வியாளர்களும் பங்கேற்றனர். அதற்கு அப்பால், சமுரத்தி, வதிவிடப்பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க மேலதிக செயலாளர் திருமதி. ஹேமா பெரேரா அவர்களும் சர்வ் நிறுவனத்தின் பணிப்பாளர் சஞ்ஜீவ த மெல் அவர்களும் பங்குபற்றினர்.



சமூகப்பணித் தினத்திற்கு சமாந்திரமாக மார்ச் மாதம் 16ம் திகதி 9.30 மணிமுதல் 11.30 மணிவரை UBUNTU எனும் தலைப்பிலான ஊடகக் கலந்துரையாடல் ஒன்று தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் நிகழ்த்தப்பட்டது. அதில் கனடா நாட்டின் டொரன்ட்டோ பல்கலைக்கழகத்தில் சமூகவிஞ்ஞானத்துரை பேராசிரியர் சரத் சந்திரசேக்கர அவர்கள் வளவாளராக கலந்து சிறப்பித்தார்கள். இதில் இலங்கையைச் சேர்ந்த உள்நாட்டு வெளிநாட்டு சமூகப்பணி மாணவர்கள், துறைசார் வல்லுனர்கள் அதனுடன் தொடர்பான சேவைகளில் ஈடுபடுபவர்கள் கலந்துகொண்டனர்.

மானிட வாழிடங்களில் சேவை வழங்கல் 2021

சமூகப்பணிக் கல்லூரியில் சமூகப்பணி பட்டத்தினை பயிலும் 3ம் ஆண்டு மாணவர்களுக்கு மானிட வாழிடங்களில் சேவை வழங்கல் எனும் கிராமிய பாசறையினை BSW 2017/2018 கல்வியாண்டு மாணவர்களுக்கு ஒழுங்குசெய்யப்பட்டது. இது மாரச் மாதம் 24ம் திகதி முதல் ஏப்பிரல் மாதம் 04ம் திகதி வரை சிலாபத்தில் நடாத்தப்பட்டது. சிலாப பிரதேச செயலகப்பிரிவிற்கு உட்படும் கிராம சேவைப் பிரிவுகளில் 10 நாட்கள் தங்கியிருந்து கிராமிய பாடசாலை நிகழ்ச்சியினை பூர்த்தி செய்தனர். இங்கு அப்பிரிவுடன் தொடர்பான பிரச்சினைகள் இங்கு இனங்காணப்பட்டதுடன் குறிப்பாக பிரதேச செயலகத்தில் இணைந்து சேவை வழங்கும்போது ஏற்படும் பலவீனங்கள் சேவை தொடர்பாக மக்களிடமுள்ள தெளிவு மற்றும் உத்தியோகத்தர்களுக்கிடையில் காணப்படும் தெளிவு போன்றன இங்கு அடையாளம் க





சிலாபம் பிரதேச செயலகமும் சிலாபம் திம்முத்து மன்றமும் சமூகப்பணிக் கல்லூரியின் 3ம் ஆண்டில் கல்விபயிலும் மாணவர்களுக்கு தம்மால் இயன்ற உதவிகளையும் முழு ஒத்துழைப்பினையும் வழங்கினர்.

இணையவழி வெசாக் பௌர்ணமி பக்திப் பாடல் நிகழ்ச்சி

சமூகப்பணிக் கல்லூரியின் சமூகப்பணி பட்டப் பாடநெறியினை பயிலும் 2019/2020 குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட வெசாக் பக்திப்பாடல் நிகழ்ச்சியொன்று இணையவழி ஊடாக நடாத்தப்பட்டது. கொரோனா தொற்று காரணமாக நேரடியாக நிகழச்சிகளை நடாத்தமுடியாமலிருந்தும் பிணி பீதியினை நீக்குவோம் பௌத்தம் போற்றுவோம் என்ற தலைப்பில் பாடல்கள் இசைக்கப்பட்டன.

2021ம் ஆண்டில் மாணவர்களுடன் நடாத்தப்பட்ட இணையவழி நிகழ்ச்சி

சமூகப் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக மென் கருவிகளை பயன்படுத்தலும் கலையின் பயன்பாடும் என்ற வெபினார் கலந்துரையாடல்




முழு சமுதாயத்தினையும் சூழ்ந்துள்ள சமூகப்பிரச்சினை காரணமாக தனிநபர், குழு, சமுதாயம் பல பிரச்சினைகளை எதிர்நோக்கிவருகின்றது. தங்கியிருக்கும் மனப்பாங்கு, வரையறைக்கு உட்பட்ட சிந்தனை, தூக்கமின்மை, புதியவை கற்றுக்கொள்ளப்படாமை, எந்த முயற்சியிலிரும் ஈடுபடாது வாழக்கையை துறத்தல், அடுத்தவரை மதிக்காமை, போன்றவற்றை நாளாந்தம் காணுகின்றோம். இச்சிந்தனைகளும் நடத்தைகளும் சமூகத்தில் புதிய சமூக பிரச்சினைகளை உருவாக்குவதற்கு காரணமாக அமைகின்றன. போலி நம்பிக்கைகள், மற்றும் தனது இயலுமைகள் மீதான அவநம்பிக்கைகள் போன்றன காரணமாக தமது வாழ்க்கையை சீரழித்து வருவதனை காணக்கூடியதாக உள்ளது. பெரும்பாலான ஊடகங்கள் கூட சுதந்திரமான மனித மனோநிலையினை உருவாக்குவதனை விட முரண்பாடுடன் கூடிய சமுதாயத்தினை உருவாக்க முயற்சித்து வருகின்றனர். இத்தகைய சூழலில் மனிதநேயமிக்க இனங்களுக்கிடையிலான ஒற்றுமை மற்றும் சகிப்புத்தன்மை எம்மிலிருந்து நீங்கிவருகின்றது.

கலை மற்றும் ஆக்கத்திறனின் ஊடாக சமூக பிச்சினைகளுக்கு தீர்வினை காணுதல், பிரச்சினைகளுடன்கூடிய நபர்களை வலுப்படுத்தல் மற்றும் சமூகத்தினை ஆரோக்கியமான திசையினை நோக்கி நகரத்தல் போன்ற சமூக மாற்றங்களை கொண்டுவருவதற்கு நாம் இடையீடு செய்யவேண்டியுள்ளது. அதனாலேயே இதற்கு ஆக்கபூர்வமான இடையீடு தேவைப்படுகிறது. அதற்கான ஒரு சிறு முயற்சியே இதுவாகும்.

2021ம் ஆண்டை வெற்றியகரமானதாக ஆக்கிக்கொள்வதற்கு கூட்டு முயற்சி முக்கியமானதாகும். சமூகப்பிரச்சினைகளற்ற நாட்டை உருவாக்குவதற்கு கூட்டு முயற்சியில் ஈடுபடுவது முக்கியமானதாகும். புத்தாண்டின் எதிர்பார்ப்பு சமூகப்பிரச்சினைகளற்ற சமூகத்தினை கட்டியெழுப்புவதற்கு தேவையான சூழலை உருவாக்குவதற்கு ஆக்கபூர்வமான அணுகுமுறையினை பயன்படுத்துவோம்.

சமூகப்பிரச்சினைகளுக்கு தீர்வாக மென் பொருட்களை பயன்படுத்தலும் கலையின் பயன்பாடும் என்ற தலைப்பின் கீழ் வெபினார் கலந்துரையாடல் மெராகி நவ் ட்டு சர்வ் சமூகப்பணி மாணவர் அமைப்பினால் 2021 ஜனவரி மாதம் 09ம் திகதி ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. அதில் கொழும்பு பல்கலைக்கழக சமூக விஞ்ஞானத்துறை கலாநிதி ஜகத் பண்டார பத்திரகே, சபரகமுவ பல்கலைக்கழக சிங்கள மொழித்துறை கலாநிதி சம்பா த சில்வா, பாடலாசிரியர் ரவி சிரிவர்த்தன தென் ஆசிய பல்கலைக்கழக பட்டப்படிப்பை பயிலும் அனுஸ்கா கஹந்தகம பங்கேற்றனர்.



சமூக பிச்சினைகளுக்கு இடையீடுசெய்யும் நோக்கில் யானை மனித மோதல் தொடர்பாக மெராகி ஸ்ரீலங்கா சமூகப்பணி மாணவர் சங்களத்தினால் 2021.02.13ம் திகதி மாலை 6.00 மணிக்கு ஒழுங்குசெய்திருந்தது. அதில் கொழும்பு பல்கழைக்கழக சமூகவியல் துறையின் கலாநிதி. மொஹமட் மஹீஸ் வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்தன சூரியபண்டார மற்றும் கணடாவின் டொரன்ட்டோ பல்கலைக்கழ பேராசிரியர் சரத் சந்திரசேக்கர அவர்களும் கலந்துகொண்டனர்.

சூழலும் பெண்களும் என்ற தலைப்பிலான வெபினார் நிகழச்சி

2021ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 04ம் திகதி மாலை 06 மணிமுதல் சிங்கள மொழியில் நடாத்தப்பட்டது. அதனை மொராக்கி சமூகப்பணி மாணவர் சங்கம் ஒழுங்க செய்திருந்தது. அதில் கொழும்பு பல்கழைக்கழக சமூகவியல் துறையின் கலாநிதி. மொஹமட் மஹீஸ் சபரகமுவ பல்கலைக்கழக சமூவிஞ்ஞானத்துறையின் கலாநிதி சந்திம்மா கயாத்ரி விஜேசுந்தர, பேராதனை பல்கலைக்கழக சமூகப்பணித்துறை சுதந்திக்கா ரஸ்நாயக்க மற்றும் FISD நிறுவனத்தின் நிகிச்சித்திட்ட பணிப்பாளர் சமித்தா சுகத்திமாலாவும் பங்கேற்றனர். அதனை தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் மாணவி நயனதாராவினால் ஒருங்கமைக்கப்பட்டது.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் சௌபாக்கிய வாரத்திற்காக நடாத்தப்பட்ட வெபினார் செயற்பாடு: அனர்த்த முகாமைத்துவத்தில் சமூகப்பணியாளரின் இடையீடு (சமூகப்பணி மாணவர்களின் அனுபவங்களுடன்) 2021 யூலை 6ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று மாலை 7 மணிக்கு ஆரம்பமானது.

பயிற்சிப் பிரிவு



அறிமுகம்

2004ம் ஆண்டு தாபிக்கப்பட்ட பயிற்சிப் பிரிவானது தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திலுள்ள நான்கு பிரதான பிரிவுகளில் ஒன்றாகும். இப்பிரிவானது பயிற்சியளிக்கும் பணிப்பாளரின் கீழ் இயங்கிவருகின்றது. 2020ம் ஆண்டில் சிரேஸ்ட பயிற்சி உத்தியோகத்தர்கள் இருவரையும் இரண்டாம் வகுப்பைச் சார்ந்த பயிற்சி உத்தியோகத்தர்கள் 08 பேரும் இப்பிரிவில் பணிபுரிகின்றனர். இது தவிர முகாமைத்துவ உதவியாளர் தரம் I சார்ந்த ஒருவரும் தரம் II சார்ந்த முகாமைத்துவ உதவியாளர்கள் இருவரும் தரம் III சார்ந்த முகாமைத்துவ உதவியாளர் ஒருவரும் இப்பிரிவில் பணியாற்றுகின்றனர்.

பயிற்சிப் பிரிவின் நோக்கங்கள்

1. பல்வேறு துறைகள் மற்றும் உரிய பிரிவுகளில் பயிற்சித் தேவைகளை அடையாளம் காணல்
2. நாட்டில் பயிற்சித் தேவைகளை அடையாளம் கண்டு அதற்கிணங்க மனித வளங்களை பயிற்றுவித்தல்
3. தேவை மதிப்பீட்டின் அடிப்படையில் பயிற்சிகளை வழங்க வேண்டிய துறைகளை அடையாளம் காணல்
4. சேவைநாடியின் தேவைகளுக்கேற்ப பயிற்சி நிகழ்ச்சிகளை திட்டமிடுதலும் செயற்படுத்தலும்
5. பயிற்சி நடவடிக்கைகளில் பாடவிதானங்களை முன்னேற்றுதலும் புதுப்பித்தலும்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பயிற்சிப் பிரிவினால் உளவளத்துணை பட்டப் பாடநெறி, மற்றும் பட்டப்பின் பாடநெறிகளை ஆரம்பிக்கப்பட்வுள்ளதுடன் பல்வேறு துறைகளை அடிப்படையாகக்கொண்டு பயிற்சி நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்து வருகின்றது. அங்கு நீண்டகால மற்றும் குறுங்கால பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் பாடநெறிகளும் ஏனைய தொழில்வாண்மையான பாடநெறிகளும் ஒழுங்கு செய்யப்படுகின்றன. அவற்றுள் நீண்டகால பயிற்சிநெறிகள் பின்வருமாறு அமைகின்றன.

- உளவளத்துணை உயர் டிப்ளோமா பாடநெறி
- உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி

- முதுமையியல் மற்றும் முதியோர் பராமரிப்பு டிப்ளோமா பாடநெறி
- சிறுவர் பாதுகாப்பு டிப்ளோமா பாடநெறி
- சமூக பராமரிப்பு டிப்ளோமா பாடநெறி
- சமுதாயஞ்சார் சீர்த்திருத்த டிப்ளோமா பாடநெறி
- உளவளத்துணை சான்றிதழ் கற்கைநெறி
- சமூகப்பணி சான்றிதழ் கற்கைநெறி
- சிறுவர் மையமாகக்கொண்ட சமுதாய அபிவிருத்தி சான்றிதழ் கற்கைநெறி
- விசேட கல்வியினை கற்பித்தல் தொடர்பான சான்றிதழ் கற்கைநெறி

இப்பாடநெறிகள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்துவதற்கான ஆற்றலுள்ளதுடன் உரிய கல்விப்பாடநெறிக்கு உள்ள கேள்வியினை அடிப்படையாகக்கொண்டு மொழிமூலம் தீர்மானிக்கப்படுகிறது.

பயிற்சிப் பிரிவினால் தேவையின் நிமித்தம் நடாத்தப்படும் குறுங்கால பயிற்சி நிகழ்ச்சிகள் பின்வருமாறு

- மகிழ்ச்சிகரமான குடும்பம்
- உளவளத்துணையில் மதிப்பிடல் முறைமை
- நெருக்கீடு மற்றும் உளவியல் உளவளத்துணை
- எதிர்பாராத கர்ப்பம் தரித்தலுக்கான உளவளத்துணை
- சமூக பீதி முகாமைத்துவம்
- உளவளத்துணை இடையீட்டிற்கான நுட்பமுறைகள்
- சீர்த்திருத்தச் சேவையுடன் தொடர்பான உளவளத்துணை
- போதைப்பொருள் பாவனைக்கான உளவளத்துணை
- மெண் திறன்கள்
- விடய முகாமைத்துவத்திற்கான ஆரம்ப திறன்கள்
- குடும்பங்களுடன் பணிபுரிவதற்கான ஆரம்ப திறன்கள்
- குழுக்களுடன் பணிபுரிவதற்கான ஆரம்ப திறன்கள்
- சமுதாயத்துடன் பணிபுரிவதற்கான ஆரம்ப திறன்கள்
- தலைமைத்துவம்
- மோதல் முகாமைத்துவம்
- சமூக பராமரிப்பு
- தொழில் சூழலையும் அன்றாட வாழ்க்கையையும் சமநிலைப்படுத்துவதற்கான வாழ்க்கைத் திறன்.
- சிறுவர் அபிவிருத்தி
- விசேட தேவையுடைய சிறுவர்களுக்காக மேற்கொள்ளப்படும் இடையீட்டிற்கான சமூகப்பணி இடையீடு
- செயற்திட்ட வரைபுக்கான பயிற்சிப் பட்டறை
- சமுதாய செயற்திட்ட முகாமைத்துவத்திற்கான பயிற்சிப் பட்டறை
- முதியோர் பராமரிப்பிற்கான உளவளத்துணை இடையீடு
- வறுமை ஒழிப்பிற்கான நுட்பமுறைகள் மற்றம் நிலையான வாழ்க்கை அபிவிருத்தி

- முரண்பாடு களைதலுக்கான சமுதாய அபிவிருத்தி மற்றும் சமுதாயத்தினை அடிப்படையான முகாமைத்துவம்
- திறன் அபிவிருத்திப் பயிற்சிகள்

2021ம் ஆண்டில் பயிற்சிப் பிரிவினால் நடாத்தப்பட்ட பாடநெறிகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள்

டிப்ளோமா பாடநெறிகள்

1. உளவளத்துணை உயர் டிப்ளோமா பாடநெறி

அறிமுகம்

உளவளத்துணை உயர் டிப்ளோமா பாடநெறி தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பயிற்சிப் பிரிவினால் வார இறுதி பயிற்சி நெறியாக செயற்படுத்தப்பட்டுவருகிறது. இந்த டிப்ளோமா பாடநெறியானது பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் SLQF சிபாரிசுகளுக்கிணங்க கொழும்பு நிலையத்தினை மையமாகக்கொண்டு நடாத்தப்பட்டு வருகின்றது.

இலக்கு:

அறிவு, திறன், மனப்பாங்கு மற்றும் உள நிலை மேம்பாட்டுடன்கூடிய தொழில்வாண்மையாளர்களை உருவாக்குதல்

இலக்கு:

அறிவு, திறன், மனப்பாங்கு மற்றும் உள நிலை மேம்பாட்டுடன்கூடிய தொழில்வாண்மையாளர்களை உருவாக்குதல்

நோக்கம்:

- உளவளத்துணைத் துறைக்கு தரமான தொழில்வாண்மையாளர்களை உருவாக்குதல்
- உளவளத்துணையாளர்களின் உயர் தொழில்வாண்மை திறன்களை விருத்தி செய்தல்
- உளவளத்துணையாளரின் இடையீட்டு திறனை மேம்படுத்தல்

மொழிமூலம் - சிங்களம்

காலம்

21 மாதங்கள். இப்பாடநெறியில் 03 மாத கால உளவளத்துணை பயிற்சி உள்ளடங்கும். (வார இறுதியில் நடாத்தப்பட்டுவரும் பாடநெறியாகும்.)

பாடநெறிக் கட்டமைப்பு

இதற்கான முழு மதிப்பெண்கள் (Credit) 30 ஆகும். இதில் விரிவுரைகள் 405 மணித்தியாலங்களும் 150 மணித்தியாளங்கள் களப்பயிற்சியினையும் உள்ளடக்கியுள்ளது. அதற்கேற்ப முழுமையாக 555 மணித்தியாளங்களை உள்ளடக்கியதாக இப்பாடநெறி அமைகிறது.

உளவளத்துணை உயர் டிப்ளோமா பாடநெறியானது பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது

- பாட அலகுகள் 09
- களப்பயிற்சி

2021ம் ஆண்டில் உளவளத்துணை உயர் டிப்ளோமா நடாத்தப்பட்ட நிலையங்கள்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கொழும்பு பிரதான காரியாலயத்தினை மையமாகக்கொண்டு 2019.01.27ம் ஆண்டில் இப்பாடநெறி ஆரம்பிக்கப்பட்டது. தற்போது உயர் டிப்ளோமா பாடநெறியினை பயிலும் மாணவர்கள் களப் பயிற்சியில் ஈடுபட்டுவருகின்றனர்.

2. உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி

அறிமுகம்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பயிற்சிப் பிரிவினால் வார இறுதி பயிற்சி நெறியாக உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி முன்னெடுக்கப்பட்டுவருகிறது. இந்த டிப்ளோமா பாடநெறியானது பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் SLQF சிபாரிசுகளுக்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளது.

இலக்கு:

அறிவு, திறன், மனப்பாங்கு மற்றும் உள நிலையுடன்கூடிய உரிய பிரயோக அனுபவத்தினை கொண்ட தொழில்வாண்மையாளர்களை உருவாக்குதல்

நோக்கம்:

- உளவளத்துணைத் துறைக்கு தரமான தொழில்வாண்மையாளர்களை உருவாக்குதல்
- உளவளத்துணையாளர்களின் உயர் தொழில்வாண்மை திறன்களை விருத்தி செய்தல்
- உளவளத்துணையாளரின் இடையீட்டு திறனை மேம்படுத்தல்

மொழிமூலம்

சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கிலம்

காலம்

21 மாதங்கள். இப்பாடநெறியில் 03 மாத கால உளவளத்துணை பயிற்சி உள்ளடங்கும். (வார இறுதியில் நடாத்தப்பட்டுவரும் பாடநெறியாகும்.)

பாடநெறிக் கட்டமைப்பு

இதற்கான முழு மதிப்பெண்கள் (Credit) 30 ஆகும். இதில் விரிவுரைகள் 405 மணித்தியாலங்களும் 135 மணித்தியாள களப்பயிற்சியினையும் உள்ளடக்கியுள்ளது. அதற்கேற்ப முழுமையாக 540 மணித்தியாளங்களை உள்ளடக்கியதாக இப்பாடநெறி அமைகிறது.

2021ம் ஆண்டு டிப்ளோமா பாடநெறிகள் நடாத்தப்பட்ட நிலையங்கள்

1. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் சீதுவை பிரதான அலுவலகம் (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம்)
2. சமுதாயஞ்சார் சீர்த்திருத்த உத்தியோகத்தர்களுக்கானது - மாத்தறை, குருநாகல், ரத்னபுரி
3. தலாவை பிரதேச நிலையம்
4. அம்பாறை பிரதேச நிலையம்
5. ரத்னபுரி பிரதேச செயலகக் காரியாலயம்.
6. குருநாகல்
7. கண்டி (தமிழ் மொழிமூலம்)
8. புத்தளம் (தமிழ்மொழிமூலம்)
9. மட்டக்களப்பு மாகாண சபை பரிபாலன மத்தியநிலையம் (A மற்றும் B எனும் குழுக்கள்)
10. யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் காரியாலயம்
11. கிளிநொச்சி பிரதேச நிலையம் (வார நாட்களில் ஒரு பாடநெறியும் வாரா இறுதியில் ஒரு பாடநெறியும்).

தற்போதளவில் 2022ம் ஆண்டுக்குரிய சீதுவை (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம்), ரண்ண, தலாவை, குருநாகல், கண்டி (தமிழ் மொழிமூலம்), ஹட்டன் (தமிழ் மொழிமூலம்) மற்றும் அம்பாறை (சிங்கள மற்றும் தமிழ் மொழிமூலம்) ஆகிய பிரதேசங்களில் உளவளத்துணை டிப்ளோமா புதிய பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு நேர்காணல் நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது. இதற்கு அப்பால் சீதுவை பிரதான அலவலகத்தினை மையமாகக்கொண்டு உளவளத்துணை உயர் டிப்ளோமா பாடநெறியினை (சிங்கள மொழிமூலம்) ஆரம்பிப்பதற்கும் நேர்காணல் நடாத்தப்பட்டுள்ளது.

3. மூப்பியல் மற்றும் முதியோர் பராமரிப்பு தொடர்பான டிப்ளோமா பாடநெறி

அறிமுகம்

மூப்பியல் மற்றும் முதியோர் பராமரிப்பு தொடர்பான டிப்ளோமா பாடநெறியானது மூப்பியல் மற்றும் முதியோர் பராமரிப்புத்துறையில் தமது தொழல்வாண்மையான அபிவிருத்தியினை ஏற்படுத்திக்கொள்ள விரும்புகின்ற நபர்கள் அல்லது தற்போது அத்துறையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற, தமது தொழில் வழிகளை விசாலமாக்கிக்கொள்ள எதிர்பார்க்கும் நபர்களை மையமாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. முதுமையடையும் சமூகத்தினால் உருவாக்கப்படும் புதிய வாய்ப்புக்களுக்கு இணைவாக அர்த்தமுள்ள தொழில்வாண்மை மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில் இப்பாடநெறி முன்வைக்கப்படுகின்றது. இப்பாடநெறியினை பூர்த்திசெய்யும்போது மாணவர்களினால் நீண்டகாலம் ஆரோக்கியமான வாழ்க்கையினை வாழும்போது ஏற்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் திறன்களை உருவாக்குவதற்கும் தேவையான அவசியமான தொழில்வாண்மையை கட்டியெழுப்புவது நோக்கமாகும். முதியோர்

பராமரிப்புச் சேவை துறையில் மாணவர்கள், தனிநபர் தொழில்வாண்மை பாதையினை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு இது உதவுகின்றது.

மூப்பியல் மற்றும் முதியோர் பராமரிப்பு தொடர்பான டிப்ளோமா பாடநெறியானது **பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் SLQF சிபாரிசுகளுக்கினங்கவும்** மற்றும் உயர் கல்வி அமைச்சின் தர உறுதி அலகினை (Quality Assurance Unit) கவனத்திற்கொண்டு பகுதிநேர பாடநெறியாக இருப்பதுடன் இலங்கையில் வழங்கப்படும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளபட்ட தகைமைகளை உருவாக்கும் நோக்கில் இது உருவாக்கப்பட்டுள்ளது.

இலக்கு:

அறிவு, திறன், மனப்பாங்கு மற்றும் உள நிலை மேம்பாட்டுடன் கூடிய உரிய பரீட்சயத்துடன் கூடிய மூப்பியல் மற்றும் முதியோர் பராமரிப்பு பாடப்பரப்பில் செயற்பட எதிர்பார்க்கும் மதிநுட்ப தொழில்வாண்மையாளர்களை உருவாக்குவதும் இத்துறையில் பணிபுரிவதற்கு விருப்பமுள்ள நபர்களின் தொழில்வாண்மை ஆற்றலை விருத்தி செய்வதும்.

நோக்கம்:

- பராமரிப்பாளர் துறைக்கு தரமான தொழில்வாண்மையாளர்களை உருவாக்குதல்
- முதியோர் தொடர்பான துறையில் ஈடுபடும் தொழில்வாண்மையாளர்களின் தொழில்வாண்மை திறன்களை முன்னேற்றிக்கொள்ளல்.
- தொழில்வாண்மையாளர்களின் இடையீட்டு திறனை மேம்படுத்தல்

மொழிமூலம் : சிங்களம்

காலம் : 18 மாதங்கள்

பாடநெறிக் கட்டமைப்பு

இதற்கான முழு மதிப்பெண்கள் (Credit) 30 ஆகும். இதில் விரிவுரைகள் 405 மணித்தியாலங்களும் 135 மணித்தியாள களப்பயிற்சியினையும் உள்ளடக்கியுள்ளது. அதற்கேற்ப முழுமையாக 540 மணித்தியாளங்களை உள்ளடக்கியதாக இப்பாடநெறி அமைகிறது.

- பாட அலகுகள் 10
- களப்பயிற்சி

2021ம் ஆண்டினுள் டிப்ளோமா பாடநெறிகள் நடாத்தப்பட்ட நிலையங்கள்

1. முதியோருக்கான செயலக அலுவலகம், பத்தரமுல்லை

2021.12.08ம் திகதி இந்த டிப்ளோமா பாடநெறியின் இறுதி பனல்சபை நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது.

சான்றிதழ் கற்கை நெறி

1. விசேட கல்வி கற்பித்தல் முறை தொடர்பான சான்றிதழ் கற்கைநெறி

அறிமுகம்

சமூக சேவை திணைக்களத்தின் வேண்டுகோளிற்கினங்க இச்சான்றிதழ் கற்கைநெறி நடாத்தப்பட்டதுடன் சமூக சேவை திணைக்களத்தின் கீழ் உள்ள இளம் மாற்றுத்திறனாளிகளுக்கான தொழில்வழிகாட்டல் பயிற்சி நிலையங்களில் தொழில்வாண்மை போதனாசிரியர்களை அடிப்படையாகக்கொண்டு இப்பயிற்சி நடாத்தப்பட்டது. இச்சான்றிதழ்பாடநெறிக்காக 2018 மற்றும் 2019ம் ஆண்டுகளில் நியமனம் பெற்ற தொழிற்கல்வி போதனாசிரியர்கள் 11 பேர் பங்கேற்றனர். அவர்கள் ஜக்கி, தையல், கைப்பணி, கணிணி, வீட்டு மின்னிணைப்பு நுட்பவியல், அழகுக்கலை, மோட்டார் நுட்பவியல், இலக்ட்ரொனிக் ஆகிய துறைகளில் தொழில்வழிகாட்டுனர்களாக பணிபுரிகின்றனர்.

இலக்கு

தொழில்வாண்மையாளர்களிடத்தில் மாற்றுத்திறனாளிகளுடன் பணிபுரிவதற்கு இருக்கவேண்டிய அறிவு, திறன், மனப்பாங்கு மற்றும் மனநிலை மாற்றங்களை உருவாக்குவதும் தமது தொழில்வாண்மையை பயனுள்ளதாக மேற்கொள்ளச்செய்வதும்.

நோக்கம்

- தரம்வாய்ந்த தொழில்வாண்மையாளர்களை உருவாக்குவது
- தொழில்வாண்மையாளர்களினால் கற்பிக்கின்றபோது அதனை செயற்திறன்மிக்கதாக மேற்கொள்வதற்கு தேவையான பயிற்சியினை வழங்குவது.

மொழிமூலம் - சிங்களம்

கால எல்லை - 03 மாதங்கள்

படம்: விசேட கல்வி கற்பித்தல் முறைமை பற்றிய சான்றிதழ் பாடநெறி மாணவர்கள் மாதம்பை மற்றும் தெலம்புயாய சமூக சேவை தொழில்வாண்மை பயிற்சி நிலையங்களில் கள நடவடிக்கைகளில் ஈடுபடுவதனை மேற்பார்வை செய்தல்





பயிற்சிப் பிரிவினால் 2021ம் ஆண்டு நடத்திய கல்வி மற்றும் பயிற்சிகள்

1. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பயிற்சிப் பிரிவினால் நடாத்தப்படுகின்ற பாடநெறி மற்றும் பயிற்சி பிரபல்யப்படுத்தல் செயற்பாடுகள்

பயிற்சிப் பிரவினால் நடாத்தப்படுகின்ற கல்விசார் பாடநெறிகள் (சான்றிதழ்.டிப்ளோமா.உயர் டிப்ளோமா) மற்றும் பயிற்சிகள் பற்றிய விளிப்புணர்வினை பொதுமக்கள் மத்தியில் அதிகரிக்கும் நோக்கில் பல பிரதேசங்ளில் இக் கல்வி மற்றும் பயிற்சிநெறிகளை பிரபலப்படுத்தும் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. அவ்வாறு நடாத்தப்பட்ட நிகழச்சிகள் தொடர்பான விபரம் பின்வருமாறு,

- 2021.03.10ம் திகதி நீர்கொழும்பு பிரதேச செயலகத்தில் கல்வி மற்றும் பயிற்சிநெறிகளை பிரபலப்படுத்தும் நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.
- 2021.03.21 மற்றும் 24ம் திகதிகளில் பின்வரும் பகுதிகளில் கல்வி மற்றும் பயிற்சிநெறிகளை பிரபலப்படுத்தும் நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.
    - ஹம்பாந்தொட்டை பொதுச் சுகாதார அலுவலகம்
    - கம்புருப்பிட்டி பிரதேச செயலகம்
    - ஹக்மன பிரதேச செயலகம்
    - மாலிம்பட பிரதேச செயலகம்
    - வெலிப்பிட்டிய பிரதேச செயலகம்
    - மாத்தறை மாவட்ட செயலகம்

- 2021.03.31ம் திகதி அத்துரலிய மாவட்ட செயலகத்தில் கல்வி மற்றும் பயிற்சிநெறிகளை பிரபலப்படுத்தும் நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.

படம்: மாத்தறை மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஹம்பாந்தோட்டை பொது சுகாதார அலுவலக உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட கல்வி மற்றும் பயிற்சிநெறிகளை பிரபலப்படுத்தும் நிகழ்ச்சி.





2. பயிற்சிப் பிரிவினால் நடாத்தப்பட்ட கொவிட் 19 காலப்பகுதியிலான தொலைபேசி மூலமான உளவளத்துணை சேவை

அறிமுகம்

இலங்கை சமூகத்தினுள் கொவிட் - 19 பெருந்தொற்று நிலை காரணமாக பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் உளவியல் பிரச்சினைகள் தோன்ற ஆரம்பித்தன. அங்கு உளவளத்துணையாளர்கள் போன்றோரின் தேவை மேலோங்கின. எனினும் நாட்டினுள் நடைமுறைப்படுத்தப்பட்டுவந்த போக்குவரத்து தடை மற்றும் நாடு முடக்கம் என்பன காரணமாக நேரடி உளவளத்துணை இடையீட்டினை மேற்கொள்ளமுடியாதிருந்தது. அவ்வாறே கொவிட் 19 நிலைக்கு முகங்கொடுத்த நபர்களுக்கும் தேவையான உளவளத்துணை இடையீட்டினை மேற்கொள்வது கடினமானதாக அமைந்தது. அந்நிலையை அடிப்படையாகக்கொண்டு பிரச்சினைகளுடன் கூடிய நபர்களுக்கு உளவளத்துணை இடையீட்டினை மேற்கொள்ளும் நோக்கில் தொலைபேசிமூலமான உளவளத்துணை சேவையினை ஆரம்பிக்கப்பட்டது. அது மாகாணங்களை அடிப்படையாகக்கொண்டு நடாத்தப்பட்டது. பயிற்சிப் பிரிவின் அனைத்து உத்தயோகத்தர்களும் இதில் பங்கேற்றனர்.

நோக்கம்: கொவிட் 19 பெருந்தொற்று காரணமாக பிரச்சினைகளை எதிர்நோக்கும் நபர்களுக்காக உளவளத்துணை சேவையினை வழங்குதல்

கால எல்லை – 2021ம் ஆண்டு முழுவதும்

சேவைநாடிகளின் எண்ணிக்கை – கொவிட் 19 தொற்றினால் பாதிக்ப்பட்ட 135 பேர்

படம்: கொவிட் 19 காலப்பகுதியிலான தொலைபேசி மூலமான உளவளத்துணை சேவை தொடர்பாக பொதுமக்களை அறிவுறுத்த தயாரிக்கப்பட்ட விளம்பரம்



3. உளவளத்துணை டிப்ளோமா பாடநெறியின் களக்கற்கை கையேட்டை திருத்தும் பணிகள்

அறிமுகம்

உளவளத்துணை கல்வித்துறையை ஆராயும்போது உளவளத்துணை தொடர்பான கோட்பாட்டுரீதியான அறிவு மாத்திரமன்றி அதற்கு சமமான திறன்களையும் களக் கற்றலையும் பெற்றுக்கொடுப்பது முக்கியமானதாகும். அந்த நோக்கத்த நிறைவேற்றுமுகமாக உளவளத்துணை டிப்ளோமாவினை பயிலும் மாணவர்கள் வகுப்பறை விரிவுரைகளின் இறுதியில் களப் பயிற்சிக்காக களத்தில் இணைக்கப்படுகின்றனர். அங்கு உளவளத்துணை போன்றதொரு தொழில்வாண்மை பாடடநெறியின் தரத்தினை பேணும் நோக்கில் இக்களக் கற்கை கையேட்டை பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் தராதர சிபாரிசுகளுக்கு இணங்கும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதுவரை பயன்படுத்தப்பட்ட களக் கற்கை கையேட்டினை திருத்தியமைப்பதற்காக 2021.05.10ம் திகதி மருத்துவ உளவியலாளர் ரொசான் தம்மபால அவர்களின் தலைமையில் ஒரு பயிற்சியும் சிரேஸ்ட விரிவுரையாளர் திரு. தனபால விஜேசிங்ஹ மற்றும் பேராசிரியர் திருமதி. வசந்தா சுபசிங்ஹ அவர்களின் பங்களிப்பில் 2021.12.09ம் திகதி மற்றுமொரு பயிற்சிப்பட்டறையும் நடாத்தப்பட்டது. இதில் பயிற்சிப் பிரிவின் பணிப்பாளர் உள்ளிட்ட அனைத்து சிரேஸ்ட பயிற்றுவிப்பு உத்தியோகத்தர்கள்/பயிற்றுவிப்பு உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.

நோக்கம்: உளவளத்துணை டிப்ளோமா பாடநெறியினை பயிலும் மாணவர்களின் களச் செயற்பாடுகளை மிக உயர்ந்த தரத்தில் பேணிச் செல்லுதல்

4. கள மேற்பார்வையாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள்


அறிமுகம்

பயிற்சிப் பிரிவினால் நடாத்தப்படுகின்ற டிப்ளோமா மற்றும் உயர் டிப்ளோமா பாடநெறியிகளில் மாணவர்களை களத்தில் இணைப்புச்செய்யப்படுகின்ற கள மேற்பார்வையாளர்களுக்காக இப்பாடநெறித் தொடர் தமிழ் மற்றும் சிங்கள மொழிமூலம் நடாத்தப்பட்டது. அதற்கேற்ப 10 நிகழச்சிகள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்தப்பட்டன.

நோக்கம்: டிப்ளோமா/உயர்டிப்ளோமா பாடநெறியினை பயிலும் மாணரவர்களின் கள மேற்பார்வை நடவடிகைகளை மேற்கொள்ளும் கள மேற்பார்வையாளர்களின் திறனை அபிவிருத்தி செய்தல்.

படம்: கள மேற்பார்வையாளர்களை பயிற்றுவிக்கும் பயிற்சித் தொடருக்காக தயாரிக்கப்பட்ட விளம்பரம் மற்றும் ஓவியச் சிகிச்சை (தமிழ் மொழி மூலம்) அமர்வுகள்





5. சமூகப்பணி பரீட்சயத்தினுள் அடிப்படை திறன் பயன்பாடு தொடர்பான இணையவழி குறுங்கால பயிற்சி

அறிமுகம்

சமூகப்பணி பயிற்சிகளுள் அடிப்படை திறன்களை பயன்படுத்துவது தொடர்பான இணையவழி பயிற்சிநெறியினை புதிதாக பதவியேற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்டது. சிங்களம் மற்றும் தமிழ் மொழி ஆகிய இரு மொழிமூலமும் இந்நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதுடன் 2021 யூன் மாதம் 12ம் திகதி முதல் 2021 ஆகஸ்ட் 09ம் வரை சிங்கள மொழிமூலமான பயிற்சியினையும் 2021. யூலை 13ம் திகதிமுதல் 2021 ஆகஸ்ட் 09ம் திகதி வரை சிங்கள மொழிமூலமான நிகழச்சியினையும் நடாத்தப்பட்டது. அங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 04 குழுவாக பிரிக்கப்பட்டு நான்கு நிகழச்சிகள் நடாத்தப்பட்டன. அதற்காக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் புதிதாக பதவியேற்ற பட்டதாரிகள் 784 பேர் சிங்கள மற்றும் தமிழ் மொழிமூலம் பங்கேற்றனர்.

நோக்கம்

- நிலையான அபிவிருத்திக்காக செயற்திறன்மிக்க பயனுள்ள சேவையினை வழங்குவதற்கு உரிய வகையில் தயாரிக்கப்பட்ட/ விருப்பத்திற்கேற்றவாறு ஒழுங்குசெய்யப்பட்ட நிகழச்சிகளின் ஊடாக சமூக நலன்புரி சமூகப் பணியின் கள மட்டத்தில் பணிபுரியயம் உத்தியோகத்தர்களின் திறன் விருத்தி செய்தல்.
- சமூகப்பணி, உளவளத்துணை, சமூக நலன்புரி, சமூக கொள்கை மற்றும் சமூக அபிவிருத்தி ஆகிய துறைகளில் தொழில்வாண்மையாளர்களுக்க தேவையான அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கினை தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்வதற்கு வசதியளித்தல்


கற்றல் பெறுபேறுகள்

இப்பயிற்சியின் இறுதியில் பங்குபற்றனர்களிடமிருந்து பின்வரும் பெறுபேறுகளை எதிர்பார்க்கப்படுகிறது.

- சமூகப்பணி தொடர்பான எண்ணக்கருவினை விளக்குதல்
- சமூகப்பணி முறைமையை அடையாளம் காண்தல்
- சமூகப்பணி அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு வரைவிலக்கணப்படுத்தல்
- இடையீட்டு செயன்முறையின் திறன் அபிவிருத்தி செய்வதற்கு
- பிரயோகரீதியான உறவுகளின்போது சமூகப்பணி திறன் பயன்படுத்துவதற்கு
- ஜீவனோபாய அபிவிருத்தி செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தும்போது தற்கால பயன்பாட்டை பகுப்பாய்வு செய்வதற்கு

கொழும்பு கம்பஹா, குருநாகலை, இரத்தினபுரி, நுவரேலியா, அநுராதபுரம், பதுளை, அம்பாறை, காலி மற்றும் கழுத்துறை ஆகிய பிரதேங்களை உள்ளடக்கியதாக இந்நிகழ்ச்சியை இணையவழி ஊடாக 05 நாட்கள் நடாத்தப்பட்டன. இந் நிகழச்சி சமுரத்தி, வதிவிடப் பொருளாதாரம், நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி மற்றும் அரச வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளர் நீல் பண்டார ஹப்புஹின்ன அவர்களின் வழிகாட்டலில், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம்சாமினி அத்தனாயக்க அவர்களினதும் சமுரத்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆர்.சீ.பீ. திலக்கசிரி அவர்களின் வழிகாட்டலின் கீழ் நடாத்தப்பட்டது.

படம் - சமூகப்பணி பயிற்சியினுள் அடிப்படைத் திறன் பயன்பாடு தொடர்பாக இணையவழி மூலமான குறுங்கால பயிற்சியின் அங்குரார்ப்பண நிகழ்வு மற்றும் பயிற்றுவிக்கும் காட்சி



6. வடமேல் மாகாண பாடசாலை உளவளத்துணை ஆசிரியர்களுக்கான உளவளத்துணை தொடர்பான குறுங்கால பயிற்சி

அறிமுகம்

வடமேல் மாகாண பாடசாலைகளுக்காக புதிதாக நியமிக்கப்பட்ட பாடசாலை உளவளத்துணை ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கேற்ப 140 வடமேல்மாகாண பாடசாலை ஆசிரியர்களுக்கான உளவளத்துணை தொடர்பான குறுங்கால பயிற்சி நடாத்தப்பட்டது. உளவளத்துணை ஆசிரியர்கள் மத்தியில் உளவளத்துணை தொடர்பான தலைமைத்துவ அறிவு போலவே பிரயோக அறிவின் பயன்பாடு தொடர்பான தெளிவினை மேலும் முன்னேற்றும் நோக்கில் இந்நிகழச்சி 2021 யூலை 29ம் திகதி மற்றும் 2021 ஆகஸ்ட் மாதம் 05, 12, 19 மற்றும் 26 ஆகிய தினங்களில் நடாத்தபட்டன. இந்நிகழ்ச்சி சிங்கள மொழிலமூலம் நடாத்தப்பட்டது.


நோக்கம்

- வடமேல் மாகாணத்தினுள் புதிதாக நியமனம் பெற்ற உளவளத்துணை ஆசிரியர்களுக்கு உளவளத்துணை தொடர்பான அறிவு மற்றும் திறன் முன்னேற்றுதல்
- உளவளத்துணையின் புதிய பாடமாக பாடசாலை உளவளத்துணை துறை தொடர்பான தெளிவினை உளவளவளத்துணை ஆசிரியர்கள் மத்தியில் ஏற்படுத்தல்

பங்குபற்றியவர்களின் பின்னூட்டல்

இந்நிகழ்ச்சியில் பங்குபற்றிய புதிய பாடசாலை உளவளத்துணை ஆசிரியர்கள் குறிப்பிடும் வகையில் அவர்கள் பாடசாலை கட்டமைப்பினுள் உளவளத்துண சேவையினை மேலும் பயனுள்ளதாக மேற்கொள்வதற்கு தேவையான அறிவு மற்றும் திறன்களை பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. அவ்வாறே நிகழச்சிகள் ஊடாக பெற்றுக்கொண்ட பிரயோக அறிவினை இத்தொழில்வாண்மையினுள் மிகச் செயற்திறனான முறையில் பங்கேற்பதற்கான ஊக்குவிப்பும் கிடைத்துள்ளது.

படம்: வடமேல் மாகாண பாடசாலை உளவளத்துணை ஆசிரியர்களுக்கான உளவளத்துணை தொடர்பான குறுங்கால பயிற்சியின் அங்குரார்ப்பண வைபவமும் பயிற்சி நடாத்தும் சந்தர்ப்பம்.





7. பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் இலங்கை தகைமை மட்ட நியமப் (SLQF) பெறுபேற்றினை அடிப்படையாகக்கொண்ட உயர் கல்விக்கேற்பவும் (Outcome based higher education) புதிய பாடத்திட்டத்தினை உருவாக்குவது தொடர்பான உத்தியோகத்தர்களை முன்னேற்றும் நிகழச்சி

நவீன கல்விமுறையினுள் பெறுபேற்றினை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறையினை மிகவும் பயனுள்ள முறைமையாக அடையாளம் காணலாம். அதற்கேற்ப இம்முறையியலானது உயர்கல்வியினுள் பெருமளவு பயன்படுத்தப்பட்டுவருகின்றது. தேசிய சமூ அபிவிருத்தி நிறுவனத்தின் கல்விசார் உத்தியோகத்தர்கள் இக்காலகட்டத்தில் பட்டப்பின் படிப்பு, பட்டம், உயர் டிப்ளோமா, டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதனால் அவர்களின் கல்வியாளர் பாத்திரத்தினை புதுப்பித்துக்கொள்வது முக்கியமானது. அதற்கேற்ப இந்நிகழ்ச்சியானது தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பயிற்சிப் பிரிவின், சமூகப்பணிக் கல்லூரி மற்றும் சமூக அபிவிருத்தி கொள்கை, ஆய்வு மற்றும் வெளியீட்டுப் பிரிவின் உத்தியோகத்தர்களுக்காக இணையவழியூடாக நடாத்தப்பட்டது.

நோக்கம்

- தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஊடாக புதிமாக ஆரம்பிக்கப்படவுள்ள பட்டப் பாடநெறியின் தரத்தினை பேணுதல்
- உத்தியோகத்தர்களின் முன்னேற்றத்திற்காக இலங்கை தகைமை மட்ட நியமம் தொடர்பான அறிவினை இற்றைப்படுத்தல்.
- வேண்டுக்கோளின் அடிப்படையிலான பாடநெறிகளுக்கான புதிய பாடநெறிகளை தயாரிக்கும்போது பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் இலங்கை தகைமை மட்ட நியமத்தினை பயன்படுத்துவதனை ஊக்கப்படுத்தல்
- நிலையான அபிவிருத்திக்காக கல்வி மற்றும் சமூக நலன்புரிச்சேவையினை வழங்கும் அமைப்பு முறையை ஊக்கப்படுத்தல்.

இவ்வாறு இரு நிகழ்ச்சிகளை இரு அமர்வுகளாக நடாத்தியதுடன் அது தொடர்பான விளக்கம் பின்வருமாறு

வளப் பங்களிப்பு – பேராதனை பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் தீப்த்தி பண்டார

பங்குபற்றியவர்களின் பின்னூட்டல்

பெறுபேற்றினை அடிப்படையாகக்கொண்ட உயர் கல்வி மற்றும் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் இலங்கை தகைமை மட்ட நியமம் தொடர்பாக இதுவரை காணப்பட்ட அறிவினை மேலும் மெருகூட்டிக்கொள்ளவதற்கான வாய்ப்பு கிடைத்தது என்பது பங்குபற்றுனர்களின் கருத்தாகும். அவ்வாறே இதன் ஊடாக கற்றல் செயன்முறையை மிகவும் பயனுள்ளதாக மேற்கொள்வதற்கான உந்துதல் கிடைத்ததாகவும் அவர்கள் கருத்து தெரிவித்தனர்.

8. முதுமையியல் மற்றும் முதியோர் பராமரிப்பு தொடர்பான குறுங்கால பயிற்சி

அறிமுகம்

சமுதாய செயற்பாடுகளில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்கள் அவர்களின் கடமையினை மேற்கொள்ளும்போது முதுமையியில் தொடர்பான அறிவானது பயனுள்ளது. அதற்கேற்ப வடமேல் மாகாண சமூக சேவை திணைக்களத்தின் வேண்டுகோளுக்கேற்ப வடமேல் மாகாண சமூக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிரத்தி உத்தியோகத்தர்கள் 100 பேருக்காக இணையவழி ஊடாக இது நடாத்தப்பட்டது.

நோக்கம்

- முதியோருடன் பணிபுரிகின்ற அரச உத்தியோகத்தர்களிடம் முதுமையியல் மற்றும் முதியோர் பராமரிப்பு தொடர்பான அறிவினை மேலும் அதிகரித்தல்
- சமூக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கடமைகளை மேலும் செயற்திறனான மேற்கொள்வதற்கு வழிகாட்டல்

காலம்: 2021.10.22 முதல் 2021.11.19 வரை (05 நாட்கள்)

பங்குபற்றுனர்களின் பின்னூட்டல்

நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்ற சமூக சேவை உத்தியோத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு இந் நிகழச்சியின் ஊடாக முதுமையியல் மற்றும் முதியோர் பராமரிப்பு பற்றிய புதிய விளக்கம் கிடைத்ததாகவும் அதன் ஊடாக தமது தொழில்வாண்மை நடவடிக்கையின்போது முதியோரின் உடல், உள மற்றும் சமூக தன்மையினை உரிய முறையில் விளங்கிக்கொள்வதற்கு இங்கு கிடைத்த அறிவு பயன்பட்டதாக அவர்கள் குறிப்பிட்டார்கள்.

9. தகவல் தொழில்நுட்ப பயன்பாடு தொடர்பான உத்தியோகத்தர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சி

அறிமுகம்

நவீன உலகில் தொழில்நுட்ப முன்னேற்றமானது உலகில் பல செயற்பாடுகளை மிகவும் செயற்திறனாகவும் பயனுள்ளதாகவும் மேற்கொள்வதற்கு காரணமாக அமைந்துள்ளன. அத்தகைய காலப்பகுதியில் கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளுக்காகவும் மிகவும் பயனுள்ள தொழில்நுட்ப முறையினை அறிமுகப்படுத்துவது முக்கியமானதாகும். தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கல்விசார் உத்தியோகத்தர்களிடம் காணப்படும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவினை இற்றைப்படுத்துவது கற்பித்தல் செயற்பாடுகளை யெற்திறனான முறையில் மேற்கொள்வதற்கு காரணமாக அமையும். எனவே தகவல் தொழில்நுட்ப பயன்பாடு தொடர்பான உத்தியோகத்தர்களின் முன்னேறத்திற்காக களனி பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி. கொளசல்யா யட்டிகம்மனகே அவர்களின் பங்களிப்போடு இணையவழி ஊடாக நடாத்தப்பட்டது.

நோக்கம்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன கல்விசார் உத்தியோகத்தர்களின் கற்றல் மற்றும் பயிற்சி திறனை முன்னேற்றுதல்

இதற்காக 2 பயிற்சிப்பட்டறைகள் நடாத்தப்பட்டதுடன் அது தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

திகதி	நேரம்	தலைப்பு	பங்கேற்றவர் எண்ணிக்கை
24.08.2021	மு.ப 9.00 – ந.ப 12.00	இணையவழி கற்பித்தலுக்காகவும் பயிற்சிக்காகவும் Zoom இயக்கியை பயன்படுத்தல்	26
31.08.2021	பி.ப. 2.00 - பி.ப. 5.00	கற்பித்தலின்போது தொழில்நுட்ப கருவிகளை பயன்படுத்தல்	24

எதிர்பார்க்கப்படும் கற்றல் பிரதிபலன்கள்

இங்கு பின்வரும் கற்றல் வெளியீடுகளை அடிப்படையாகக்கொண்டு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

- வேறுபட்ட கற்றல் முறைகளை அடையாளம் காணல்
- கல்வியினை தெளிவுபடுத்தல்
- நவீன கல்விகற்கும் ஒருவரின் பண்புகளை வரைவிலக்கணப்படுத்தல்
- கற்பித்தல் செயன்முறைக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் கருவிகளை பயன்படுத்தல்
- கலந்த கற்றல் முறையினை பயன்படுத்தலும் பெருந்தொற்றுக்கு பிற்பட்ட காலப்பகுதிக்கு பொருத்தமான முறையை பயன்படுத்தலும்.

பங்குபற்றியவர்களின் பின்னூட்டல்

கொவிட் - 19 தொற்றுகாலப்பகுதியில் அவர்களின் கற்றல் நடவடிக்கைகளை தொடந்து மேற்கொண்டு செல்வதற்கு இந்நிகழ்ச்சி பயனுள்ளதாக இருந்ததாக பங்குபற்றுனர்கள் குறிப்பிட்டனர். கற்பித்தலுக்காக தொழில்நுட்பத்தினை பயனுள்ள விதத்தில் பயன்படுத்தமுடியும் என்பதனை உணரந்துகொள்வதற்கும், தற்போதுள்ள தொழில்நுட்ப அறிவினை மேலும் வளர்த்துகொள்ள இந்நிகழ்ச்சியினூடாக வாய்ப்பு கிடைத்ததாகவும் விளக்கிக்கூறினர்.

10. ஆய்வு முன்மொழிவு தயாரித்தல் தொடர்பான பயிற்சி

அறிமுகம்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனமானது கல்வி நடவடிக்கைகளில் மாத்திரமன்றி ஆய்வுகளிலும் ஈடுபட்டு வருகின்றது. அங்கு அபிவிருத்தி கொள்கை, ஆய்வு மற்றும் வெளியீட்டுப் பிரிவானது தற்கால சூழலில் இலங்கை சமுதாயத்தினுள் ஏற்படும் பல்வேறு சமூக பிரச்சினைகள் தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. அங்கு ஆய்வினை மேற்கொள்ளும் அடிப்படை படிமுறைகளுள் ஒன்றான ஆய்வுப் பத்திரம் தயாரித்தல் தொடர்பான அறிவினை கல்விசார் உத்தியோகத்தகர்களுக்கு முக்கிமானதாகும். அவ்வாறே கல்விசார் உத்தியோகத்தர்களின் கல்விசார் தேவையினை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்கும் தேவையான அறிவினை இது வழங்கும்.

நோக்கம் : ஆய்வு முன்மொழிவினை மிகவும் பயனுள்ளதாக தயாரித்துக்கொள்வது எவ்வாறு என கலந்துரையாடுதல்.

- பிரதான நோக்கத்தின் கீழ் ஆய்வு மற்றும் ஆய்வு முன்மொழிவு ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை அடையாளம் காணல்
- சிறந்த முன்மொழிவின் பிரதான எண்ணக்கருக்களை அடையாளம் காணல்

இந்நிகழ்ச்சியின்போது தேசிய சமூக அபிவிருத்த நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட ஆய்வுப் பத்திரங்கள் சாராம்சப்படுத்தப்பட்டன. இந்நிகழ்ச்சி தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் மூன்று பிரிவுகளைச் சேர்ந்தவர்களுடன் கருத்துப் பரிமாறல்களுடன் நடாத்தப்பட்டது. அங்கு பங்குபற்றுனர்களின் ஆய்வு அறிவு மற்றும் அனுபவத்தினை மிகவும் செயற்திறனானமுறையில் பகிர்ந்துகொள்ளப்பட்டது. ஆய்வு முன்மொழிவில் பிரதிபலன்களை குறிப்பிடும் முறை மற்றும் அங்கு கவனத்திற்கொள்ளவேண்டிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. அடுத்து ஆய்வின் பலம் பலவீனங்கள் கவனம் செலுத்தப்பட்டதுடன் ஆய்வுத் தலைப்பினை தெரிவு செய்யும்போது கவனம் செலுத்தப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் கலனம் செலுத்தப்பட்டது. நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட ஆய்வு முன்மொழிவுகள் சிலவற்றை அடிப்படையாகக்கொண்டு இது மேலும் கலந்துரையாடப்பட்டது.

பங்குபற்றியவர்களின் பின்னூட்டல்

இதில் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தைச் சேர்ந்த 23 பேர் பங்கேற்றனர். நிகழ்ச்சி முழுவதும் வளவாளரின் அறிவும் அனுபவமும் பகிரப்பட்டதனால் நிகழ்ச்சி மிக பிரயோக ரீதியான ஒன்றாக அமைந்திருந்தது என குறிப்பிட்டனர். தற்போது காணப்படும் ஆய்வு அறிவினை மேலும் வளர்த்துக்கொள்ள பயனுள்ளதாக இருந்தது.

11. பயிற்சி மற்றும் அபிவிருத்தி, சமூகப்பணி ஆய்வு மற்றும் கொள்கை தயாரித்தல்

அறிமுகம்

இந்நிகழ்ச்சியானது 2 நாட்கள் நடாத்தப்பட்டன. இதன்நோக்கமாக கல்விசார் உத்தியோகத்தர்களின் தொழில்வாண்மை அபிவிருத்தியினை அடைந்துகொள்வதற்கு கல்விசார் உத்தியோகத்தர்களின் கற்பித்தல், பயிற்சி, சமூகப்பணி, உளவளத்துணை, சமூக அபிவிருத்திக்கு தேவையான அறிவு, திறன், ஒழுக்கவிதிகளின் பயன்பாட்டை மேம்படுத்துவதாகும். இதில் வளவாளராக கலாநிதி. பெமெலா டீ. எம் பீரிஸ் கலந்துகொண்டுள்ளார்.

திகதி	காலம்	தலைப்பு	பங்கேற்றோர்
14.10.2021	மு.ப. 9.00 – பி.ப 4.00	பயிற்சியும் அபிவிருத்தியும்	28
11.11.2021	மு.ப. 9.00 – பி.ப 4.00	சமூகப்பணி ஆய்வும் கொள்கைகளும்	20

பங்குபற்றியவர்களின் பின்னூட்டல்

குறிப்பாக பங்குபற்றியவர்களின் சமூகப்பணி தொடர்பான தெளிவினையும் தொகுதிக் கோட்பாடுகள் தொடர்பான தெளிவு மேலும் விரிவடைந்துள்ளது. இந்நிகழச்சியியல் பங்குபற்றியவர்களுக்கு தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கொள்கை தொடர்பான அறிவும் புதப்பித்துக்கொள்வதற்கான வாய்ப்பும் கிடைத்தாக அவர்களால் குறிப்பிடப்பட்டிருந்தது.

12. சௌபாக்கிய வாரத்தினையொட்டி தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பயிற்சிப் பிரிவும் பிரதேச வள நிலையங்களை மைப்படுத்தி நடாத்தப்பட்ட இணைய வழி நிகழ்ச்சி

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் சௌபாக்கிய வாரத்தினை அடிப்படையாகக்கொண்டு செப்டெம்பர் மாதம் 23ம் திகதி முதல் 30ம் திகதி வரை பிரதேச நிலையத்தினை மையமாகக் கொண்டு பின்வரும் நிகழச்சிகள் இணையவழி ஊடாக நடாத்தப்பட்டது.

நிகழ்சி	நிலையம்	திகதி	பங்குபற்றியோர்
கோவிட் 19 தொற்றுக் காலப்பகுதியில் முன்பள்ளி செயற்பாடுகளை நடாத்திச் செல்வதற்கு ஆசிரியர்களை வலுப்படுத்தும் நிகழ்ச்சி	தலாவை நிலையம் அநுராதபுரம்	2021.09.26	86 முன்பள்ளி ஆசிரியர்கள்
கோவிட் 19 தொற்றுக் காலப்பகுதியில் முன்பள்ளி பாடசாலை கல்விக்காக பெற்றோரின் பங்களிப்பு என்பது தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்ச்சி	தலாவை நிலையம் அநுராதபுரம்	2021.09.24	186 பெற்றோர்
கோவிட் - 19 தொற்றுக் காலப்பகுதயில் சனசமூக அபிவிருத்தி சவால்களை வெற்றிக்கொள்வது தொடர்பான பயிற்சி – சமூகப்பணி தொழில்வாண்மையானவர்கள் மற்றம் சமுதாய செயற்பாட்டாளர்களுக்கானது	அம்பாறை வள நிலையம்	2021.09.26	67 சமூகப்பணியாளர்கள்
"தொழில்வாண்மை நெருக்கீடுகளை குறைப்பதற்கான உளவியல் மற்றும் அழகியற்கலை இடையீடு – கொவிட் முன்நிலை சேவை வழங்கும் தொழிவல்வாண்மையாளர்களுக்கானது	அம்பாறை பிரதேச வள நிலையம்	2021.09.30	சுகாதார மற்றும் உளவளத்துணை உத்தியோகத்தர்கள் 187 பேருக்கானது
முன்பள்ளி ஆசிரியர்களுக்கான உளநல மற்றும் நலனோம்புகை தொடர்பான பயிற்சி	கிளிநொச்சி பிரதேச வள நிலையம்	2021.09.23 2021.09.27 2021.09.29	45 முன்பள்ளி ஆசிரியர்கள்
இளைஞர்களுக்கான நெருக்கீட்டு முகாமைத்துவம்	ரண்ண பிரதேச வள நிலையம்	2021.09.29	30 இளம் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

புகைப்படம் - கிளிநொச்சி பிரதேச நிலையத்தில் நடாத்தப்பட்ட பயிற்சிப்பட்டறை





13. மத்திய மாகாண சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்னடத்தை திணைக்களத்தின் நன்னடத்தை மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட கட்டிளம்பருவ பிள்ளைகளுடன் பணிபுரிதல் தொடர்பான பயிற்சிகள்

அறிமுகம்

மத்திய மாகாண சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்னடத்தை திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு ஏற்ப நன்னடத்தை மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக 2021 ஒக்டோம்பர் 15 முதல் 26 வரை கட்டிளம் பருவ பிள்ளைகளுடன் பணிபுரிதல் பற்றிய 6 நாள் பயிற்சியொன்று நடாத்தப்பட்டது. இதில் 69 உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

நோக்கம்:

- மத்திய மாகாண சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்னடத்தை திணைக்களத்தின் நன்னடத்தை மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு கட்டிளம்பருவ பிள்ளைகளுடன் பணிபுரிவதற்கு தேவையான அறிவு மற்றம் திறன் அபிவிருத்தி
- நன்னடத்தை மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு கட்டிளம் பருவத்தினருடன் பணிபுரியும்போது ஏற்படும் பிரச்சினைகளை குறைத்துக்கொள்ளக்கூடிய விதத்தை அதிகரித்தல்

- **பங்குபற்றியவர்களின் பின்னூட்டல்**

மத்திய மாகாண சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்னடத்தை திணைக்களத்தின் நன்னடத்தை மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு தொழில்வாண்மையை சிறந்தமுறையில் கொண்டு செல்வதற்கு பயனுள்ள விதத்தில் நடாத்திச் செல்வதற்கும் பணிபுரியும்போது எற்படும் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்கும் பயனுள்ளதாகும் என குறிப்பிட்டனர்.

15. அருட்சகோதரிகளுக்கான தலைமைத்துவ மற்றும் உளவளத்துணை குறுங்கால பயிற்சி

அறிமுகம்

அருட்சகோதரிகள் சமூக நலன்புரிச் சேவைகளில் ஈடுபடுகின்றனர். அவற்றுள் பாடசாலைகளிலும் சமுதாய மட்டத்திலும் பணிபுரிந்துவருகின்றனர். அதற்கேற்ப அவர்களின் வகிபாகங்களினுள் சமுதாய மட்ட தலைமைத்துவமும் உளவளத்துணை தொடர்பான தெளிவினையும் பெறுவது தமது பணிக்கு மிகவும் பயனுள்ளதாகும். அதற்கேற்ப அருட்சகோதரிகளின் வேண்டுகோளுக்கிணங்க மேற்குறித்த பயிற்சி நடாத்தப்பட்டது.

நோக்கம்

- சமுதாய மட்டத்திலும் பணிபுரியும் அருட்சகோதரிகள் தலைமைத்துவ திறன்களை அபிவிருத்தி செய்வதன் ஊடாக அவர்களின் தொழில்வாண்மையை கடமைகளை பயனுள்ளதாக மேற்கொள்ளல்
- அருட்சகோதரிகளிடம் உளவளத்துணை தொடர்பாக உளவளத்துணை அறிவை ஏற்படுத்தல்

இந்நிகழ்ச்சி 2021 நவம்பர் மாதம் 01ம் திகதி முதல் 2021 நவம்பர் 19ம் திகதி வரை 10 நாட்கள் நடாத்தப்பட்டது. இதில் 57 அருட்சகோதரிகள் பங்கேற்றனர்.

பங்குபற்றியவர்களின் பின்னூட்டல்

இச் செயற்திட்டத்தினால் அவர்களின் தொழில்வாண்மை அபிவிருத்திக்கு மிகவும் பயனுள்ளதாக கருதுகின்றனர். உளவளத்துணை தொடர்பான புதிய அறிவு கிடைத்ததாகவும் குறிப்பிட்டிருந்தனர்.

16. சமூர்த்தி உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட உளவளத்துணை டிப்ளோமா பாடநெறியின் சான்றிதழ் வழங்கும் வைபவம்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்கு சமுரத்தி திணைக்களத்தின் வேண்டுகோளுக்கேற்ப நாடுபூராகவும் கடமையில் ஈடுபடும் 153 சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்காக உளவளத்துணை டிப்ளோமா பாடநெறியானது கொழும்பு, ரண்ண, மற்றும் தலாவை ஆகிய நிலையங்களில் சிங்கள மொழிமூலமும், கிளிநொச்சி நிலையத்தில் தமிழ்மொழி மூலமும் 04 உளவளத்துணை டிப்ளோமா பாடநெறிகள் நடாத்தப்பட்டன. அது 2018ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2019ம் ஆண்டு நிறைவுசெய்யப்பட்டது. இந்த டிப்ளோமா பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்த 124 டிப்ளோமாதாரிகளுக்கு டிப்ளோமா சான்றிழ் வழங்கிவைக்கப்பட்டது. இவ்வைபவம் 2021 நவம்பர் மாதம் 17ம் திகதி சமுரத்தி, வதிவிடப்பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் கீழ் உழைப்பு அரச வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க அவர்களின் பங்களிப்புடன் நடைபெற்றது.

புகைப்படம் சமுரத்தி உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட உளவளத்துணை டிப்ளோமா பாடநெறியின் சான்றிதழ் வழங்கும் வைபவத்தின் காட்சிகள்







16. பாடசாலை மாணவர்களுக்கான குறுங்கால பயிற்சிகள்

அறிமுகம்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ரண்ண பிரதேச பயிற்சி நிலையத்தின் 2021ம் ஆண்டு செயற்திட்டத்திற்கேற்ப உலக சிறுவர் தின வாரத்தினை அடிப்படையாகக் கொண்டு ‘‘எல்லாவற்றுக்கும் முன்னர் பிள்ளைகள்’’ தேசிய தொனிப்பொருளுக்கு ஏற்ப ஹம்பாந்தோட்டை தரமபால வித்தியாலத்துடன் இணைந்து அங்குள்ள பிள்ளைகளுக்காக சவால்களை வெற்றிக்கொள்வதற்கு உளவியல் ரீதியாக ஒழுங்குபடுத்திக்கொள்ளும் விதம் பற்றிய பயிற்சி நடைபெற்றது.

கலந்துரையாடல் தலைப்பு: சவால்களை வெற்றிகொண்டு பரீட்சைக்கு எவ்வாறு தயாராகுவது

பங்குபற்றியோர் : தர்மபால மகா வித்தியாலயத்தின் மாணவர்கள் 60 பேர்

விரிவுரை தலைப்பு : சவால்களை வெற்றிகொண்டு பரீட்சைக்கு தயாராதல்

பங்குபற்றியவர்களின் பின்னூட்டல்

குறித்த நிகழ்ச்சி தொடர்பாக நல்ல பின்னூட்டல் கிடைத்ததுடன் பாடசாலை மாணவர்களின் கருத்துப்படி எதிர்கால கல்வி இலக்குகளை வெற்றிகொள்வதற்கு தனக்கு இந்த நிகழச்சியின் ஊடாக கிடைக்கப்பெற்ற அறிவு மிகவும் பயனுள்ளது. அவ்வாறே இதில் பங்குபற்றிய ஆசிரியர்களின் கருத்து

பாடசாலை ஏனைய பிள்ளைகளின் விடயத்திலும் இது முக்கியமானதாகும் என்பதனால் இதுபோன்ற இன்னும் சில பயிற்சிகளை நடாத்துவது சிறந்தது என்பதாகும்.

17. நெருக்கீட்டு முகாமைத்துவம் மற்றும் மனப்பாங்கு மாற்றம் பற்றிய இரு நாள் குறுங்கால பயிற்சி

அறிமுகம்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ரண்ண பிரதேச பயிற்சி நிலையத்தின் 2021ம் ஆண்டு செயற்திட்டத்திற்கேற்ப நடாத்தப்படவேண்டிய நிகழச்சிகளில் ஒன்றாக 'சௌபாக்கிய' வாரத்திற்கு இணையாக, தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் ஹம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகத்துடன் இணைந்து ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

பங்குபற்றியோர் : தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் இணைந்து பணியாற்றும் இளைஞர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 30 பேர்

நடாத்தப்பட்ட திகதி : 2021.09.29ம் திகதி

கலந்துரையாடல் தலைப்பு : சவால்களை வெற்றிகொண்டு பரீட்சைக்கு எவ்வாறு தயாராகுவது.

பங்குபற்றிய நிறுவனம்: யாயவத்தை இளைஞர் சேவைப் பிரிவு, எரமிணியாய இளைஞர் சேவைகள் பிரிவு மற்றும் பிரதேச செயலகம்.

விரிவுரை தலைப்பு: நெருக்கீட்டை அடையாளம் காணல், நெருக்கீட்டு முகாமைத்துவம், மனப்பாங்கு அபிவிருத்தி, தொழில்வாண்மை வழிகாட்டல் மற்றும் கல்வி உளவளத்துணை.

பயிற்றுவிப்பு முறை : இணையவழி விரிவுரை, குழுக் கலந்துரையாடல், தளர்வுப் பயிற்சி மற்றும் ஒளிப்பதிவு காட்சிப்படுத்தல்.

பங்குபற்றியவர்களின் பின்னூட்டல்

குறித்த நிகழ்ச்சி தொடர்பாக நல்ல பின்னூட்டல் கிடைத்ததுடன் தமது தொழில்வாண்மை வாழக்கையில் ஏற்படும் சவால்களை வெற்றிகொள்வதற்கும், இளம் சமுதாயத்தினரின் அபிவிருத்தி விடயத்தில் இடையீடு செய்வதில் இவ்வமர்வு பயனுள்ளதாக அமைந்தது. அவ்வாறே இதில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் கருத்து தமது ஏனைய உத்தியொகத்தர்களுக்கும் இது முக்கியமானதாகும் என்பதனால் இது போன்ற இன்னும் சில பயிற்சிகளை நடாத்துவது சிறந்தது என்பதாகும்.

18. நீதிச்சேவைகள் ஆணைக் குழுவின் (JSC) கீழ் நீதி அமைச்சுடன் இணைந்து பணியாற்றும் நீதிமன்ற குடும்ப உளவளத்துணையாளர்களுக்கான குறுங்கால பயிற்சிகளை நடாத்துதல்.

அறிமுகம்

நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நீதிமன்ற குடும்ப உளவளத்துணையாளர்களின் திறன் அபிவிருத்தியினை நோக்காக கொண்டு நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நீதிமன்ற குடும்ப உளவளத்துணையாளர்களுக்காக கடமையின்போதான பயிற்சியாக இப்பயிற்சி திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் இரண்டு கட்டங்களாக நடாத்தப்பட்டது.

இச் செயற்திட்டம் இரண்டு கட்டங்களை உள்ளடக்கியது,

1. ஆரம்பக் கட்டம் : பாடவிதானம் தயாரித்தலும் அதனை பயிற்சி கைநூலாக அச்சிடுதலும்
2. இரண்டாம் கட்டம் : தயாரிக்கப்பட்ட பாடவிதானத்தை அடிப்படையாகக் கொண்டு நீதிமன்ற குடும்ப உளவளத்துணையாளர்களுக்கான பயிற்சியினை நடாத்துதல்

முதலாம் கட்டத்தில் நீதிச் சேவைகள் ஆணைக்குழு, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் மற்றும் ஆசிய மன்றத்தின் கூட்டிணைவுடன் 2020 மே மாதம் முதல் 2020 டிசம்பர் மாதம் வரை நடாத்தப்பட்டது. துறைசார் வல்லுனர்களின் பங்களிப்புடன் பாடவிதானம் தயாரிக்கபட்டதுடன் அவ்வுள்ளடக்கத்தைக் கொண்ட பயிற்சிக் கை நூலும் அச்சிடப்பட்டதுடன் அவற்றை பங்குபற்றுனர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இரண்டாம் கட்டத்தில் தயாரிக்கப்பட்ட பாடவிதானத்தை அடிப்படையாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி நடாத்தப்படவுள்ளது. இது நான்கு ஒரு நாள் பயிற்சிகளாக நடாத்தப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம்

இந்த செயற்திட்டத்தின் பிரதான நோக்கம் குடும்ப முரண்பாடு அல்லது சுமுகமான பிரிதலின் போது உறவுகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக குடும்ப உளவளத்துணையில் ஈடுபடும் நீதிமன்ற குடும்ப உளவளத்துணையாளர்களின் திறன்களை அபிவிருத்தி செய்தல்.

பிரதேச பயிற்சி நிலையங்கள் பற்றிய தகவல்கள்

சமூகப்பணி பயிற்சி, ஆய்வு மற்றும் களக் கற்கைக்கான பிரதேச நிலையம், ரண்ண

2021ம் ஆண்டிற்கான முன்னேற்ற அறிக்கை



1. அறிமுகம்

தென் மாகாணத்தில் ஹம்பாந்தோட்மை மாவட்டத்தினை மையமாகக்கொண்டு 2014.11.05ம் திகதி ஸ்ரீ ஆனந்தஹிமி பிரதேசம், 100அடி பாதை, ரண்ண எனும் விலாசத்தில் அமைந்திருக்கும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் சமூகப்பணி, பயிற்சி, ஆய்வு மற்றும் களக் கற்கைக்கான பிரதேச வள நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

நிலையத்திற்கென 02 கட்டிடங்கள் காணப்படுவதுடன் அங்கு 02 விரிவுரை மண்டபங்கள் (50 மாணவர்களுக்கு), தங்குமிட வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக 02 அறைகளும் (04 கட்டில்களுடன்) அலுவலக அறையும் சிறு நூலகமும் உள்ளது.

2021ம் ஆண்டு ரண்ண நிலையத்தின் வரவுசெலவு விபரம்

நிலையத்தின் பராமரிப்புச் செலவுகள்

தொ.இ	விபரம்	பணம் (ரூ)
01	மின் கட்டனம்	13,805.10
02	நீர் கட்டனம்	9,563.76
03	நிருவாகச் செலவு	19,440.00
	முழுச் செலவு	42,808.86

நிலையத்தின் வருமான விபரம்

தொ.இ	விபரம்	பணம் (ரூ)
01	உள்வாரி உத்தியோகத்தர்கள்/ விரிவுரையாளர்களுக்கு தங்குமிட வசதிகள் வழங்குவதன் ஊடாக பெற்ற வருமானம்	600.00
02	பாடநெறி/பயிற்சிப்பட்டறை நடாத்துவதன் ஊடாக பெற்ற வருமானம்	4,000.00
	மொத்தம்	**4,600.00**

குறிப்பு: மேற்குறித்த பெறுமானங்கள் வழங்கப்பட்ட சேவையின் பெறுமதியினை மாத்திரமே காட்டுகிறது.

2021ம் ஆண்டு நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்று காரணமாக சுகாதார பாதுகாப்பு ஆலோசனைகளுக்கேற்ப செயற்படவேண்டி இருந்ததனால் திட்டமிட்டபடி நிகழ்ச்சிகளை நடாத்த முடியாதிருந்தது.

ரண்ண நிலையத்தில் 2021ம் ஆண்டு நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் விபரம்

தொடர் இல	நிகழ்சியின் பெயர்	திகதி
01.	சமூகப்பணி பட்டப்பாடநெறிக்காக உள்ளீர்ப்பு செய்வதற்கான பரீட்சை நடாத்தல்	2021.02.18
02.	சமூகப்பணி பட்டப்பாடநெறி 2ம் வருட மாணவர்களுக்கான 1ம் தவனைப் பரீட்சை நடாத்தல்	2021.02.22
03.	சமூகப்பணி பட்டப்பாடநெறி 2ம் வருட மாணவர்களுக்கான 1ம் தவனைப் பரீட்சை நடாத்தல்	2021.02.23
04.	சமூகப்பணி பட்டப்பாடநெறி 2ம் வருட மாணவர்களுக்கான 1ம் தவனைப் பரீட்சை நடாத்தல்	2021.02.24
05.	சமூகப்பணி பட்டப்பாடநெறி 2ம் வருட மாணவர்களுக்கான 1ம் தவனைப் பரீட்சை நடாத்தல்	2021.02.25
06.	சமூகப்பணி பட்டப்பாடநெறி 2ம் வருட மாணவர்களுக்கான 1ம் தவணைப் பரீட்சை நடாத்தல்	2021.02.26
07.	சமூகப்பணி பட்டப்பாடநெறி 2ம் வருட மாணவர்களுக்கான 1ம் தவணைப் பரீட்சை நடாத்தல்	2021.02.27
08.	உளவளத்துணை டிப்ளோமா பாடநெறிக்காக உள்ளீர்ப்பு செய்வதற்கான நேர்காணல் நடாத்தல்	2021.03.25
09.	உளவளத்துணை டிப்ளோமா பாடநெறிக்காக உள்ளீர்ப்பு செய்வதற்கான நேர்காணல் நடாத்தல்	2021.09.05
10.	உளவளத்துணை டிப்ளோமா பாடநெறிக்காக உள்ளீர்ப்பு செய்வதற்கான நேர்காணல் நடாத்தல்	2021.09.27
11.	நெருக்கீட்டு முகாமைத்துவம் மற்றும் மனப்பாங்கு மாற்றம் தொடர்பான குறுங்கால பயிற்சி	2021.09.29
12.	நெருக்கீட்டு முகாமைத்துவம் மற்றும் மனப்பாங்கு மாற்றம் தொடர்பான குறுங்கால பயிற்சி	2021.09.30
13.	பாடசாலை மாணவர்களுக்கான குறுங்கால பயிற்சி	2021.10.04
14.	உளவளத்துணை டிப்ளோமா பாடநெறிக்காக உள்ளீர்ப்பு செய்வதற்கான நேர்காணல் நடாத்தல்	2021.10.07

பிரதேச பயிற்சி நிலையம், தலாவை

2021ம் ஆண்டிற்கான முன்னேற்ற அறிக்கை



1. அறிமுகம்

